# ஸ்டீல்ஸ் வெஸ்ட் கார்ரிடார் பகுதிக்கான ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்துசேவை மார்ச் 10 ஆம் தேதி முதல் இடைநிறுத்தம் செய்யப்பட்டுவிட்டது

ப்ராம்ப்ட்டன், ON (மார்ச் 9, 2021) – மார்ச் 10 ஆம் தேதியன்று, பேருந்து சேவை துவக்க இருக்கும் சமயத்திலிருந்து, ஸ்டீல்ஸ் வெஸ்ட் கார்ரிடார் பகுதிக்கு பேருந்து போக்குவரத்து நிர்வாகம் தனது சேவையை இடை நிறுத்திவிடுவார்கள்.

இது பீல் ப்ப்ளிக் ஹெல்த் அமைப்பின் தீவிர புலனாய்வின்போது ப்ராம்ட்டன் பேருந்து போக்குவரத்து நிர்வாகத்தினால் இயக்கரீதியாக எடுக்கப்பட்ட முடிவாகும்..

பின்வரும் பேருந்து வழித்தடங்கள் இதனால் பாதிக்கப்படும்:

- 511 ஸூம் ஸ்டீல்ஸ் மற்றும் 11 ஸ்டீல்ஸ்: ஸ்டீல்ஸ் அவென்யூ மற்றும் சிங்க்வாகவ்ஸி ஆகிய இரு இடங்களே கடைசி நிறுத்தமாக இருக்கும்
- 51 ஹியர்ஃபோர்ட்: ஸ்டீல்ஸ் அவென்யூ மற்றும் ஃபினான்சியல் ட்ரைவ் ஆகிய இரு இடங்களே கடைசி நிறுத்தமாக இருக்கும்

இந்த இடைநிறுத்தமானது குறைந்த்து ஏழு நாட்களுக்கு அமலில் இருக்கும். இந்த சேவை எப்போது கிடைக்கும் என நாங்கள் தகவல் தெரிவிக்கப்போம். கூடுதல் மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படலாம். தகவல்கள் மற்றும் வழித்தட மாற்றங்கள் பற்றிய தகவல்களுக்கு வருகை தரவும்: www.bramptontransit.com .

**பீல் ப்ப்ளிக் ஹெல்த் அமைப்பின் கோவிட்-19 பற்றிய சமுதாய புலனாய்வு**

பீல் ப்ப்ளிக் ஹெல்த் அமைப்பினர் தங்கள் சமுதாய புலனாய்வினை பூர்த்தி செய்துவருகையில், ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து நிர்வாகமும் அவர்களுடன் சேர்ந்து நெருக்கமாக பணியாற்றி வருகிறார்கள்.

பணியாளர்கள் மற்றும் சமுதாயத்தினரின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பினைப் பேணுவதற்காக, பீல் ப்ப்ளிக் ஹெல்த் அமைப்பின் பேருந்து போக்குவரத்து பணியாளர்களுக்கு கோவிட்-19 தொற்று இருக்கிறதா என சோதித்துக் கொள்ளும் வசதி செய்யப்பட்டிருக்கிறது; மற்றும் பேருந்து பணியாளர்கள் மருத்துவ தரம் கொண்ட முகக் கவசங்கள் அணிய தேவைப்படுகிறார்கள். சில நிகழ்வுகளில் அவரவரே தனிமைப்படுத்திக்கொள்வது தேவைப்படுவதால், ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்தின் சேவை அளவுகளை இது பாதிக்கலாம்

தொற்று இருக்கிறதா என சோதனை செய்வது பெருத்த எச்சரிக்கையுடன் செய்யப்படுகிறது என்று பீல் ப்ப்ளிக் ஹெல்த் அமைப்பினர் அறிவுறுத்தியுள்ளனர். இந்தச் சமயத்தில், பரிந்துரைக்கப்பட்ட கூடுதல் நடவடிக்கைகள் இருப்பதால், சமூகப் பரவல் எனும் ஆபத்தினைத் தாண்டி பேருந்து இயக்குபவர்கள், பொது மக்கள் அல்லது பேருந்து போக்குவரத்து பயனர்களுக்கு கூடுதல் ஆபத்து எதுவும் இல்லை. சமூகப்பரவல் இருப்பதால் அனைத்து போக்குவரத்து பயனர்களும் பொது சுகாதார பரிந்துரைகளை தொடர்ந்து பின்பற்றுவது முக்கியம். உங்களுக்கு தொற்றுக்கான அறிகுறிகள் இருந்தாலோ அல்லது COVID-19 நோய் இருப்பதாக கண்டறியப்பட்ட ஒருவரின் நெருங்கிய தொடர்பு இருந்தாலோ பேருந்து போக்குவரத்தை பயன்படுத்த வேண்டாம். பேருந்துகளில் பயணிக்கும்போது, உடல் ரீதியான சமூக விலகலை முடிந்தவரை பராமரிக்கவும், இறுக்கமான முகமூடியை அணியவும், மருத்துவ அவசரநிலை இருந்தால் தவிர, (சாப்பிடுவதற்கோ அல்லது குடிப்பதற்கோ) முகக் கவசங்களை தாழ்த்துவதைத் தவிர்க்கவும்.

செயலூக்கமுள்ள கோவிட்-19 தொற்று பரவலுக்காக மேற்கொண்ட சமுதாய புலனாய்வு பற்றிய மேலும் தகவல்களுக்கு, பீல் ப்ப்ளிக் ஹெல்த் அமைப்பினைத் தொடர்பு கொள்ளவும். சேவை பற்றிய புது தகவல்களுக்கு, ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்தின் Brampton Transit's Twitter பக்கத்தை பார்க்கவும் அல்லது 905.874.2999 க்கு அழைக்கவும்.

**கோவிட்-19 பாதுகாப்பு நடவடிக்கைகள்**

மேம்படுத்தப்பட்ட துப்புரவு மற்றும் சுத்திகரிப்புக்கான கால அட்டவணை நடைமுறையில் உள்ளது. ஒவ்வொரு **48** மணி நேரத்திற்கு ஒரு முறை, அனைத்து கடினமான மேற்பரப்புகள்**,** இயக்குபவர் அமரும் இடம் மற்றும் பயணியர் இருக்கைகளை கிருமி நீக்கம் செய்வதே ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து சேவையினரின் குறிக்கோள் ஆகும். பெரும்பாலான பேருந்துகள் தற்போது ஒவ்வொரு **24** மணி நேரத்திற்கு ஒரு முறை சுத்திகரிக்கப்படுகின்றன. பேருந்து வசதிக்கான கட்டிடங்கள் மற்றும் பேருந்து முனையங்களில் உள்ள மேற்பரப்புகள் தினசரி அடிப்படையில் துப்புரவு செய்யப்பட்டு சுத்திகரிக்கப்படுகின்றன.

பீல் பப்ளிக் ஹெல்த் அமைப்பின் வழிகாட்டுதலின் பேரில் பேருந்து பயணிகளுக்கு நினைவூட்டப்படும் விஷயங்களாவன:

- பேருந்து முனையங்கள் மற்றும் பேருந்துகளின் உள்ளே இருக்கும்போது இறுக்கமாக பொருந்துகின்ற முக கவசங்கள் அல்லது மருத்துவம் அல்லாத முகத்திரைகள் அணிவது கட்டாயமாகும் - மருத்துவ நிலைமைகள் உள்ளிட்ட விலக்குகள் பொருந்தும். உங்கள் மூக்கு, வாய் மற்றும் கன்னத்தை எல்லா நேரங்களிலும் முகத்திரைகள் மறைத்தபடி இருக்க வேண்டும். மருத்துவ அவசரநிலை இருந்தால் தவிர, (சாப்பிடுவதற்கோ அல்லது குடிப்பதற்கோ) முகக் கவசங்களை தாழ்த்துவதைத் தவிர்க்கவும்
- முகக் கவசம் மூடி அணிந்திருந்தாலும் கூட, பேருந்து முனையங்களிலும் பஸ் நிறுத்தங்களிலும் உடல் ரீதியான சமூக விலகலைப் பராமரிக்கவும்.

- பேருந்து பயணத்தின்போது கை சுத்திகரிப்பி அல்லது துடைப்பான்கள் போன்ற உங்கள் சொந்த கிருமிநாசினியை எடுத்துச் செல்லுங்கள், உங்கள் கைகளை அடிக்கடி கழுவவும்.
- நீங்கள் நோய்வாய்ப்பட்டிருந்தால், தயவுசெய்து பேருந்தில் பயணம் செய்வதைத் தவிர்க்கவும். அருகிலுள்ள COVID-19 மதிப்பீட்டு தளத்தில் தொற்றுக்காக சோதனை செய்யப்படுவதை உறுதிசெய்து, பொது சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றவும்.

எங்கள் ஊழியர்களையும் சமூகத்தையும் பாதுகாப்பாக வைத்திருக்க COVID-19 தொற்றுக்கு ஆட்பட்டு விடும் அபாயத்தைக் குறைக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து நிர்வாகம் தொடர்ந்து எடுத்து வருகிறது.

**லின்குகள்**

- மார்ச் 9 ஆம் தேதி முதல் கோவிட்-19 தொற்றுபரவல் எதிரொலியாக ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து சேவைகளில் மற்றங்கள் (Changes to Brampton Transit service in response to COVID-19 effective March 9)

-30-

**ப்ராம்ப்ட்டன் நகர ஊடக தொடர்பு**
குர்வீந்தர் சிக்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-2028 | Gurvinder.A.Singh@brampton.ca

**பீல் பகுதி ஊடக தொடர்பு**
அஸ்லீ ஹாக்கின்ஸ்
தகவல் தொடர்பு சிறப்பியலாளர் –பொது மக்கள் சுகாதாரம்
பீல் பிரதேசம்
416.818.4421 | ashleigh.hawkins@peelregion.ca